NST Campus

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 07 | தமிழ் மொழியும் இலக்கியம் | 1.30 மணித்தியாலம் |
| --- | --- | --- |

சுட்டிலக்கம் : ......................  புள்ளிகள்

## பகுதி – 1

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

01. இயற்கை கண்களை ஈர்த்துக் களிப்படையச் செய்யும். இங்கு களிப்பு என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
   1) வியப்பு  2) மகிழ்ச்சி  3) கோபம்  3) துன்பம்

02. நாம் பிறர் நலனுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடாது. இங்கு குந்தகம் என்பதன் ஒத்த பொருள்
   1) இடையூறு  2) தீமை  3) ஆதரவு  4) குற்றம்

03. நிலம் எனும் நல்லாள் நகும். நகும் என்பதன் எதிர்ப்பதம்
   1) அழும்  2) சிரிக்கும்  3) கனைக்கும்  4) ஓலமிடும்

04. உயிர்க்குறில் எழுத்துக்களின் எண்ணிக்கை
   1) 30  2) 12  3) 05  4) 07

05. கிரந்த எழுத்துக் கூட்டமாக அமைவது
   1) ஸ, ட  2) ஜ, த  3) த, \  4) ஹ, ஸ்ரீ

06. ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா
   முத்து விழா  2) பொன் விழா  3) பவள விழா  4) மாணிக்க விழா

07. குமார் வீட்டைச் சென்றடைந்தான். இதில் வந்துள்ள இரண்டாம் வேற்றுமைப் பொருள்
   1) ஆக்கல்  2) அழித்தல்  3) ஒத்தல்  4) அடைதல்

08. வேதம், மந்திரம், கறை, மற, ஒளித்தல் ஆகிய பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்
   1) மறை  2) மரை  3) பறை  4) முறை

09. இளவரசன் நல்ல முறையில் ஆட்சி செய்தான். இதில் எழுவாய்
   1) ஆட்சி  2) நல்ல  3) இளவரசன்  4) செய்தான்

10) பசுக்கள் நிரையாகச் சென்றன. இதில் பசுக்கள் என்பது
   1) அஃறிணை ஒன்றன்பால்  2) அஃறிணை பலவின்பால்
   3) படர்க்கை ஒன்றன்பால்  4) உயர்திணை பலர்பால்

11) பசு கதறும் என்பது போல எருது
   1) கனைக்கும்  2) முக்காரமிடும்  3) கத்தும்  4) குரைக்கும்

12) மிக அரிது என்பதை உணர்த்தும் உவமைத் தொடர்

1) சித்திரப்பதுமை போல
2) வெள்ளிடை மலை போல
3) அத்தி பூத்தாற் போல
4) ஏட்டுச் சுரைக்காய் போல

13) சிகாமணி பதை பதைத்துக் கொண்டு எழுந்தார். புதை பதைப்பு என்பது

1) அடுக்கு மொழி
2) இணை மொழி
3) இரட்டைக் கிளவி
4) அடுக்கிடுக்கு மொழி

14) குயவன் - குயத்தி போல ஆயன் என்பதன் பெண்பால் சொல்

1) ஆயள்
2) ஆய்ச்சி
3) ஆயவள்
4) ஆயச்சி

15) Digital என்ற கலைச் சொல்லின் தமிழ் வடிவம்

1) கடவுச் சொல்
2) எண்மானம்
3) பண்பலை
4) ஊடகம்

16) பின்வருவனவற்றுள் கூட்டுப் பெயராக அமைவது

1) முதலாளி
2) நீர் வீழ்ச்சி
3) கடன்காரன்
4) படிப்பு

17) சொற்கள் தொடராக வரும் போது அதனைப் பிரித்துக் காட்ட பயன்படும் குறியீடு

1) காற்புள்ளி
2) அரைப்புள்ளி
3) முற்றுப்புள்ளி
4) மேற்கோட்குறி

18) 'பிள்ளை அழுத கண்ணீர்"' என்ற நாடகத்தினை எழுதியவர்

1) கி.வா. ஜஹந்நாதன்
2) சி. ஜெயசங்கர்
3) கழனிரான்
4) கல்கி

19) பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று. இக்குறள் இடம் பெற்ற அதிகாரம்

1) படைச்செருக்கு
2) கல்லாமை
3) கூடா ஒழுக்கம்
4) பொருள் செயல் வகை

20) ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும். ஏன்ற பழமொழி உணர்த்தும் பொருள்

1) சுய நலம்
2) பிறர் நலம்
3) சுய நலமும் பிறர் நலமும்
4) பொது நலம்

(20 X 2 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

01) பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

1) நான் விரும்பும் பெரியார்
2) பென்சிலின் சுயசரிதை
3) மரங்களை வளர்ப்போம்
4) ஒழுக்கம் உயர்வு தரும் - பேச்சு (20 புள்ளிகள்)

02) உமது பாடசாலையில் நடைபெற்ற சிறுவர் தினம் பற்றி விபரித்து உமது நண்பனுக்கு 50 சொற்களுக்கு குறையாமல் கடிதம் எழுதுக

அல்லது

புதிய சலவை சவர்க்காரம் ஒன்றுக்கான விளம்பரம் ஒன்றினை எழுதுக.

(10 புள்ளிகள்)

03) சுருக்கமான விடை தருக.

1) அழக சுந்தரதேசிகர் எழுதிய நூல்கள் 03 தருக.
2) ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்று கவிதைகள் ஆசிரியர் யார்?
3) நானிலங்களும் எவை?
4) திருக்குறளிலுள்ள அதிகாரங்கள் எத்தனை?
5) "பழங்கள் என்பதன் இரு பொருள்களும் எவை?
6) ஒழுக்கத்தின் சிறப்பையும் ஒழுக்கமின்மையால் ஏற்படும் இழிவையும் தருக.
7) குறிஞ்சிப் "க்கள் எவ்விதம் காட்சியலித்தது என கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்?
8) வேற்றுமை என்றால் என்ன?
9) வெண்ணிலவை மறைப்பது எது? ஏன கவிதையில் கூறப்படுகிறது.
10) உ.வே. சாமிநாதையர் அச்சேற்றிய நூல்கள் 03 தருக.

(10 X 1.5 = 15 புள்ளிகள்)

04) பின்வரும் சொற்றொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் எழுதுக.

1. மட மட
2. தக தக
3. விருப்பு வெறுப்பு
4. பச்சை பசேலென
5. வற்றி வரண்டு

(5 X 1 = 5 புள்ளிகள்)

05) பின்வரும் அரும்பதச் சொற்களின் பொருளை எழுதுக.

1. புடலம்: ...........................................................................................................................................

2. ஆசிர்வாதம்: ......................................................................................................................

3. வுந்தனை: ..........................................................................................................................

4. சான்றோர்: ...........................................................................................................................

5. சௌகரியம்: ..........................................................................................................................

(05 X 01 = 05 புள்ளிகள்)

06) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.

1. கடலலை: ...............................................................................................

2. கற்கோயில்: ...............................................................................................

3. படவேலை: ...............................................................................................

4. காலைப்பொழுது : ...............................................................................................

5. மரவேர்: ...............................................................................................

(05 X 01 = 05 புள்ளிகள்)